
# நித்யகல்யாணி

## கவிதைத் தொகுதி




முதன்


JPL
C2051



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொ... 
யாழ்ப்பா...

2891

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்யகல்யாணி

முல்லை அமுதன்

கவிதைகள்

KOHA JPL

மூர் வீதி இல நூலகம்
யாழ்.மாநகர சபை
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● நித்யகல்யாணி
● கவிதைத்தொகுதி
● அச்சுப்பதிவு—
**கவின் அச்சகம்,** 559, **கே. கே. எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்.**
● பதிப்புரிமை—
**முல்லை அமுதன்**
● முதற்பதிப்பு — **1981**
● விலை ரூபா **5-00**

894.811
அ

2891

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நோக்கு...

2891
KOHA JPL

1

இலக்கிய உலகில்
என்
கவி வித்துக்கள்
ஊன்றிக் கால் பதிக்கும்
— (எனது கவி)

எனத் துணிச்சலோடு, இக் கவிதைத் தொகுதியைத் தரும் முல்லை அமுதன்,

நாங்கள் செலுத்துவது
காகிதப் படகல்ல...
ஞானசம்பந்தன்
எறிந்த —
எதிரேறுகின்ற
கவி ஓலைகள் —(கவிஞர்கள்)

எனவும் நம்பிக்கையோடு பாடுகிறார். சாதாரண விஷயங்கள் என நாம்கருதும் செய்திகள் கூட இவரது பார்வையிற் படும் போது சக்திவாய்ந்த கவிதைகளாக மலர்கின்றன. வறுமையையும் பெண்களின் அவல நிலையையுமே அதிகமாகப் பாடியுள்ளார். மாறிக்கொண்டுவரும் சமூக அமைப்பில் வறியவர்களும் பெண்களுமே இன்னுமின்னும் பாதிக்கப் பட்டுக்கொண்டு வருவதால்... அவைஒரு கவிஞனின் தனித்துவமான பார்வையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழுத்திருப்பதில் வியப்பில்லை. பிரிந்து நிற்காமல் அவர்களது இன்னல்களோடு தன்னையும் இணைத்துக்கொண்டு குரல் கொடுப்பதைக் காணமுடிகிறது.

எங்களுக்கு
மாளிகை மயக்கங்கள்
சிறிதுமில்லை
பசிமயக்கம்தான்
அதிகம் —(மயக்கம்)

அர்ச்சனை மலர்களாய்
மலர்ந்து
காத்திருக்கிறோம்
அர்ச்சகரைத்தான்
காணோம் (பெண்)

ஆகியகவிதைகளும் தொகுதிலுள்ள இன்னும் பலகவிதைகளும் இதற்குச் சான்று. கவிதைகளைப் படித்ததுமே அவற்றின் காட்சி மனதில் விரிகிறது. எழுத்துக்களை ஓசை நயத்துடன் சொற்களாக்கி கவிதை வடிவில் அழகான சித்திரங்களாக தருகிறார். இன்னும் சில கவிதைகளில் ஒரே சங்கதி ஒன்று அழிந்து மற்றதாய் வருகிற தொடர்காட்சியாக கவிஞனின் கற்பனைமூலம் காண்பிக்கப் படுகிறது.

வாழ்க்கைப் பேதுறுவில்
ஏறமுடியாத
வெண்துகில் பறவைகள்
................
................
................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்யாண மாலைகளில்
சேர்க்கமுடியாத
உதிரிப்பூக்கள்;
வாழ்வுத் தடங்கள்
நிலைமாறிப் போனதால்
இவர்கள்
திசை மாறிய பறவைகள்

விதவைகள்

சமூகப் பிரக்ஞையுடன் மனதில் கிளரும் உணர்ச்சிகளுக்கு தொனிபிசகாத உருவம்கொடுக்க முயற்சிக்கிறார். ஆனால் மனித நகரம், வாழ்வுப் பாலைவனம், வறுமைத்துச்சாதனர், சுரண்டல் சூறுவளி, வாழ்வுக் குழந்தை போன்றனவும் இன்னும் பலவுமான சொற்படிமங்களை சில கவிதைகளில் தாராளமாகப் பிரயோகிக்கும்போது அவை ரூபம் சிதையும் நிலைக்குப்படுகின்றன.

சமூக மலர்கள், துயரகீதங்கள், புதுவகை விளக்கம் எனும் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள இக் கவிதைத் தொகுதியிலுள்ள சில கவிதைகள் அவ்வப்போது சிரித்திரனில் பிரசுரமாயின. ஏனையவை இத்தொகுதிக்காகவே எழுதப்பட்ட புதுக் கவிதைகள். ஒரு கவிதைத் தொகுதியை வெளியிடும் முல்லை அமுதனிடமிருந்து இலக்கிய உலகம் இன்னும் நிறைய எதிர் பார்க்கலாம்.

சுதாராஜ்

KOnA JPL
மூர் வீதி கிளை நூலகம்
யாழ். மாநகர சபை
யாழ்ப்பாணம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 ஒரு பார்வை...

நித்திய கல்யாணி
நிர்மலமான தலைப்பு...
உள்ளே—
　　எதிர்காலக் கணவனுக்காய்
　　ஏங்கிக்கிடக்கும்
　　ஏந்திழைகள்...

சீதனம் வேண்டாம்
எனக்கூறும்
ஸ்ரீராமனுக்காய்க்
கல்லாய்ச் சமைந்திருக்கும்
அகல்யைகள்...

　　சமூக மலர்களின்
　　துயரகீதங்கள்;
　　மானுட நேயத்தின்
　　புதுவகை விளக்கம்—
　　இவையாவும்
　　இவர் படைப்புக்கள்.

வார்த்தை ஜாலங்களால்
வாய்ப்பந்தல் போடும்
கவிஞர் கூட்டத்தினுள்
இவர் விதிவிலக்கு.

　　இந்தக் கவிஞனின்
　　இதயவரவுக்கோ
　　இலக்கியஉலகம்
　　இத்தனை நாள்
　　காத்துக் கிடந்தது.

மனிதன் பற்றிய
புதுவிதமான
கோட்பாட்டின்
உயிர்ப்பதிப்பு
இவர் கவிதைகள்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயக் குடிலுக்குள்
சோக ஒழுக்குகள்...
பெண்மை வீணைகளில்
முகாரி ராகங்கள்...

கவிதைகளின்
கவித்துவத்தை எண்ணி
உரைநடைத் தன்மையை
இவர் குறைத்திருந்தால்
இக்கவிதைகள்
சாகாவரம் பெற்றிருக்கும்...

கவிஞன்...
மானுட புஷ்பங்களால்
சமூகத்தை
அர்ச்சிக்கும்
பிரம்மதேவன்.

இவன்
**கணபதி கணேசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 அர்ப்பணம்...

கனவுகளை —
—கற்பனையை —
காவிய உரமாக்கி —
இலக்கிய வயலில் —
நான் புதைவது —
—இந்த —
நித்யகல்யாணிக்காக —

## என்னுள் உயிர்த்து...


— பூபாளம் மீட்டும் நேரம்
— பன்னீரில்—
— குளித்தெழுந்து
— எழில்காட்டும்
— குமின் சிரிப்பு(ப்)
— பனிக்காலத்தேவதையே
— நீ—பூத்து...
— காத்திருப்பது
— யார்வரவிற்காக?

முல்லை அமுதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

# சமூக மலர்கள்



## எந்நாளோ

எங்கும்—
துன்பக்குரல்கள்
ஒலிப்பதைக்
கேட்கும் எங்கள்
காதுகள் —
இன்பகீதம்
கேட்கும்நாள்
எந்நாளோ...?

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

2891

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடர் கதையோ...?

இறைவா
நீ—
அன்று தொடங்கிய
வைகறை வேலைநிறுத்தத்தின்
தொடர்ச்சியே
நமது வளர்ச்சி...
சிலசமயம்
வயிறு கூடத்தான்...
அதுவும்நீ
தொடக்கிவைத்ததுவோ?

## வார்ப்புகள்

துன்பமுடிதரித்த
பிரமாக்களாதலால்
எமது—
சிருஷ்டிப்புகளும்
தரித்திரவார்ப்புகள்
ஆனதுவோ?

## ஏக்கம்

வறுமைகீதத்தை
இசைத்துக் கொண்டிருக்கும்
பெண்மைவீணையே
உன்னில்
நான்—
அனுராகமதை
மீட்டுவதெந்நாள்?

## துன்பம்

திருமணங்கள்...
சொர்க்கத்தில்
நிச்சயிக்கப்படுகின்றனவாம்
கண்ணே!
நம்திருமணம்
எங்குதான்
நிச்சயிக்கப்பட்டதோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வசந்தத்தின் வரவிற்காக

கல்யாண மலர்களை
பிரசவிக்கவேண்டிய
பெண்மைச் செடிகள்
நீங்கள்—
பன்னீர் மலர்களை
சொரிந்து விட்டு
தனிமரமாய் நிற்பதை
போல் நீங்கள்—
கண்ணீர் மலர்களை
உதிர்த்து விட்டு
பட்ட மரமாய்
நிற்கின்றீர்கள்.
நானோ —
மனவெளியில்
எழுப்பிய
தாஜ்மகாலை
விதிப்பிரளயம்
அழித்துவிட
தனியே
யாத்ராவிதியின் ஓரத்தில்
களைத்த மரமாய்
நிற்கின்றேன்—
வசந்த காலத்திற்காக...

## பெண்கள்

தென்றலைத் தூதுவிட்டு
யன்னல் கவிதை
பாடும்—
பெண்மை வீணைகள்
நாங்கள்...
மாலை நேரத்து
சீதன வெயில்
பட்டு—
சோரம் போகின்ற
விலை மாதுக்கள்.



ரு வீதி வெளி நூலகம்
யாழ். மாநகர சபை
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதைகள்

என்முன்னே—
குரைக்கும்நாய்களின்
கூப்பாடுகள்அதிகம்
எனினும்எனது—
கால்கள்
பின்வாங்காது
எதிரேறவீறுடன்
கால்களை—
பதிக்கும்

செப்பனிடா
பாதைகள்என்
கால்களைத்துளைத்திடும்
எனினும்—
அடுத்தடுத்து
என்பாதங்கள்
பாதையில்—
நடந்துகொண்டே
இருக்கும்.

என்காதுகளில்
துன்பக்கீதைகள்
போதிக்கும்
கொலைக்கண்ணன்கள்
ஏராளம்... ஏராளம்!

இருந்தும்—
கீதைகள்எல்லாம்
கீதங்களாக்கி
என்கால்கள்
முன்னேறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விதவைகள்

வாழ்க்கைப் பேதுறுவில்
ஏறமுடியாத
வெண்துகில் பறவைகள்;
காமன் பண்டிகையில்
மன்மதரா ஜனின்
கைக்குவர முடியாத
அக்கினிமலர்கள்;
விதிஇராவண ஞல்
சிறைவைக்கப்பட்ட
இராமஜெபம் செய்யும்
பதிவிரதை
அசோக வனத்துச்சீதைகள்;
விதிஆதிஷேஷன் திமிறலில்
துன்பவிரிகுடாவில்
எறியப்பட்ட
நீந்தத்தெரியாத மீன்கள்;
கல்யாணமாலேகளில்
சேர்க்கமுடியாத
உதிரிப்பூக்கள்;
வாழ்வுத்தடங்கள்
நிலேமாறிப் போனதால்
இவர்கள்—
திசைமாறியபறவைகள்.

(சிரித்திரன் ஐப்பசி)

கன்னி
வயற்காட்டில்
விதைத்த
நெல்லின் விதைகள்
நிறைமாதமாய்
அறுவடைக்காய்
காத்திருக்கிறது.



பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கவிஞர்கள்

இலக்கிய வெள்ளத்தில்
நாங்கள் செலுத்துவது
காகிதப் படகல்ல...
ஞான சம்பந்தன்
எறிந்த—
எதிரேறுகின்ற
கவி ஓலைகள்...

## ஏழ்மை

புன்னகையால்
உன்—
வறுமைக் கோலத்தை
மறைக்கும்
பெண்ணே உன்
பொன்னகைகள்
செட்டி கடையில்
அடைவுகளானதுவோ?

## எனது கவி

இலக்கிய வயலில்
என்
கவி வித்துக்கள்
ஊன்றிக்கால்பதிக்கும்
அதுவே
புதுமை மலராகி -
புரட்சிக் கனியை
காய்க்கும்,
பூக்காத—காய்க்காத
மரங்களோ—
மலடுகளாய்
வசை புராணம்—
பாடிநிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளை வரும் அக்குயில்...

முன்னம் ஒருநாள்
ஏவாள்
கதை சொன்ன அக்
குயில் —
பின்னே — மேரி
கதை சொல்லவும்
சீதை — அகலிகை
மாதவி — கண்ணகி
கதைகளை —
சொல்லியபின்
இப்போ —
வாழ் வின்றி
பாழாகிப்போன புனிதாக்கள்
கதை கூறிச்சென்றது...
மீண்டும் அக்குயில்
நாளை வரும்...
எந்த புனிதாக்கள்
கதை சொல்லுமோ...
மனம் காத்திருக்கிறது...

## துயரம்

தென்றல் விரல்கள்
தூக்க அரங்கத்தில்
கனவுக் கவிதைகளை
எழுதி —
அரங்கேற்றும்...
விழிப்புத்திரை
விழும் வரை
கவியரங்கம் தொடரும்...
திரை விழுந்தாலோ...
அந்தோ —
கனவுக் கவிதைகள்
நினைவுக் காட்டில்
தொலைந்து விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை
அச்சுறுத்தும்
வாழ்க்கைப்பிரச்சினைகள்...
என்னை —
மீண்டும் பயமுறுத்த
காத்திருக்கும்
உறவுகளின் கூட்டம்...
இவைகளின் நடுவே
என் —
கவித்துப் பாக்கியின்
வீச்சு
வீச்சு
செங்கோடுகளை
வரைந்தே செல்லும்

## வியாக்கியானம்

வாழ்க்கை
ஒரு
மலர்ப்படுக்கையல்லவாம்
நாமென்ன
முள்ளிலா
படுத்திருக்கின்றோம்.

செத்துப்போன
தமிழுக்கு —
உயிர்கொடுக்க
வந்த
கர்த்தர்கள் இவர்கள்
அதனால்தானோ
தமிழும் வாழவில்லை
நாமும் —
வாழமுடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனவுகள்

எங்கள்
வாழ்வின் உரங்கள்
கற்பனைகளும்
கனவுகளும்
ஆதலால் —
பூச்சியக் குடாவில்
வாஸ்தவத் துடுப்பெடுத்து
காலப்படகு —
விடுகின்றோம்.

## முரண்பாடுகள்

பணவீட்டில்
கல்யாண ராகங்கள்
சதிராடும் போது
எங்கள்
குடிசைமன வீட்டில்
சாக்காட்டின்
தீப்பற்றி எரியும்.

பண வீட்டில்
பணம்வைக்க இடமில்லை
ஏழைக் குடிசையில்
பணம் குடியிருக்க
வழியுமில்லை...

## சோகமலர்கள்

எங்கள்
இதயக் குளத்தில்
பூத்திருப்பது
தாமரை மலர்களல்ல...
துன்பக் கதிரவனின்
வருடலில்
பூத்திருக்கும் சோகமலர்கள்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் முன்னே...

என் முன்னே—
விளக்கு எரியவில்லை
எனினும் நான்—
விட்டில் பூச்சியானேன்.
என் முன்னே—
தீ எரியவில்லை...
எனினும் நான்—
தீக்குளிக்கின்றேன்.
என் முன்னே—
நீர்த்தடாகமில்லை
எனினும் நான்
கானல் நீரில்
நீச்சலடிக்கின்றேன்.
என் முன்னே—
வாகனங்கள் நகரவில்லை
எனினும் நான்—
விபத்துக்குள்ளாகின்றேன்.

## பரிசுகள்

விதியின் ரேகைகளின்
நடுவே—
பிரளயப் பூக்களை
பிரமராட்சஸன்
எம்—
வாழ்வுத் திரையில்
வரைந்ததால்—
வறுமைப் போட்டியில்
துன்பச்சுமைகளையே
பரிசுகளாகப் பெற்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசுவாசம்

விசுவாசத்துடன்
இறைவனைப் பிரார்த்தித்தேன் —
ஆனால்...
இறைவன் தான்
இன்னும் என்னை
விசுவாசிக்கவில்லை.

# காத்திருக்கைகள்

நாங்கள்
துஷ்யந்தர்கள்.
தினம் தினம்
புதிய
வீணைகளை எடுத்து
இளமை ராகங்களை
மீட்டிடுவோம்.
கணையாழியையே
பரிசாக அளிப்போம்
பின்னர் —
மறந்து விடுவோம்
ஏனெனில் —
நாளை ஒருவீணை —
நமக்காக
பாவமாய்க் காத்திருக்கும்.

# சிறைகள்

எங்களை
விடுவிக்க
சிபிச்சக்கரவர்த்திகள்
வராததால்
சீதனச்சிறையில்
வாடுகிறோம்.

KOHA JPL



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பல்கள்

கனவு நதிகளில்
குளிப்பதற்காக—
விழிப்பு உடைகளை
களைந்த போது
கொடுங்கங்கையாய்
கொதிக்கின்றனவே...

பிரசவத்திற்காக—
நித்திரை வைத்தியசாலையில்
படுத்திருக்கும் போது—
சுரண்டல் வேதனை
பயமுறுத்துகின்றதே...

நிம்மதிப்பதிப்புகளை
வெளியிடுவதற்காக
சொப்பன விழா
எடுக்கும் போது—
ஏமாற்றம்— விரக்தி—
சேரிமலர்களின்
புலம்பல்கள்
ஓலமிடுகின்றனவே...

மன்மதராகங்களை
மீட்பதற்காக
மாலைமயக்க வீணை
எடுத்தால்—
கண்ணீர் வீணைகள்
முகாரி மீட்டுகின்றனவே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏன்?

மலர்களே—
உங்களில்
தேனை உண்ணும்
வண்டுகள் நாம்—
மலர்தாவும்
எங்களுக்காக
நீங்கள்
மீண்டும்... மீண்டும்
தேனுண்பதற்கு
இதழ்களை
மலர்த்துகின்றீர்கள்.

## கண்சிமிட்டும் விடிவெள்ளிகள்

வியர்வைக் கண்ணுடியின்
ஒளித் தெறிப்பு,
தாகங் கொண்ட
இரவுப் பெண்
கதிரவனை கண்சிமிட்டி
உறவுக்கழைக்கும்
வரவேற்புரை.
சந்திர மன்மதனின்
மௌன ஊர்வலத்தில்
போகின்ற—
சிருங்காரப்பதுமைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நக்கீரர் யுகம்

நாங்கள்
வாழ்வது—
நக்கீரர் யுகம்
ஏனெனில்
கோடேறினும்
குற்றம் குற்றமென
வாதிடும்
நக்கீரர் வாழ்கின்றனர்.

## இது தானே?

பூவில்
தேனாய் இனிப்பது
பூவையர் பாரில்
சிந்தும்—
கண்ணீர்தானே?
பாரினில்—
கானலாய் எரிவது
கன்னியர் விடும்
எரிமூச்சு தானே?

## ரசனை

தெரு வீதியில்
நன்றாகப் பாடிய
அந்த—
விழியற்ற ஏழை
சில்லறைக்காய்
தட்டைத்
தூக்கிய போது—
கூட்டம் கலைந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர்கள்

தினம் தினம்
எங்களை —
துன்பக்கதிரவன்
வந்து —
மலரச் செய்வதால்
சோகமலர்களாகவே
மலர்ந்து சருகாகின்றோம்,

## விபத்து

தோல்வி வாகனம்
பாதை மாறி
என் —
இதய வீட்டை
இடித்து நொறுக்கியதால்
நம்பிக்கைப் பூட்டுகள்
உடைந்து சிதற —
ஐயோ —
மன மாளிகை
மணல் மேடானதே...

## ஏழ்மை

வாழ்வு
மரதன் ஓட்டத்தில்
அதிட்ட தேவதையே
நீ —
வென்று விட்டால்
துன்பத்தையே
பரிசாக அளிப்போம்.
ஏனெனில் நாம்
சேரி மேடையில்
ஏழ்மை விழா
எடுக்க வந்தவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிமொட்டுகள்

என்
மேனிப் புஷ்ப்பங்கள்
மண்ணில்
உதிர்ந்திட்டாலும்
என் —
கற்பனை மொட்டுகள்
மண்ணில்
நின்று பிரகாசிக்கும்.!

## முத்துக்கள்

ஆழ்கடலில்
முத்தெடுக்க
எம் கால்களை
பதித்தபோது
எமைச் சுற்றி
சீறிப்பாயும்
சுறுக்கள் —
திமிங்கிலங்கள் —
எனினும்
முத்தெடுக்க எம்
கால்களும் கைகளும்
எதிரேறுகின்றன.

## நம்பிக்கை நட்சத்திரம்

உன்
விழி வானத்தில்
பொழிகின்ற
கண்ணீர் மழைகள்
வறண்ட என்
இதயக் கர்ட்டில்...
நம்பிக்கை நட்சத்திர
கவி வரிகளை
வரைந்து செல்லும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழந்துணிகள்

மானிட ஜென்மத்தின்
நிர்வாண உடல்களை
மறைத்து—
அவர்களைப் புதுமையாக்கி
அழகுமாக்கி—
நாம் இப்போ
பழசாகிப் போனவர்கள்.

## வாழ்வில் வசந்தம்

வசந்த கால
மலர்கள்
சொரிந்த போது
நெஞ்சக்கரங்களில் ஏந்த
தவறினேன்.
அதனால்—
வாழ்வில் வசந்தம்
இன்றி இன்று
தவிக்கின்றேன்.

## இதய வீணைகள்

ரோம் நகரம்
எரிந்துகொண்டிருந்தபோது
நீரோ மன்னன்
பிடில்
வாசித்துக்கொண்டிருந்தானும்.
கொடுமைப் பெருநெருப்பு
மனித நகரத்தில்
எரிந்துகொண்டிருக்கையில்
நாங்கள்—
இதய வீணைகள் மீட்டிக்
கொண்டிருக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாஞ்சாலிகள்

நாங்கள்—
பாஞ்சாலிகளாதலால்
வறுமைத்துச்சாதனன்கள்
துகிலுரிகின்றார்கள்...
கண்ணன்கள்
வராததால் நமது
நிர்வாணக் கூச்சல்
தொடர்கின்றன...
நவீன கண்ணன்கள்
எங்கள்
நிர்வாண சந்நிதியில்
காமதரிசனம்
காணவே விரும்புவதால்
நாங்கள்
பாஞ்சாலிகளாகவே
காத்திருக்கின்றோம்...!

நாங்கள்
நவீன கண்ணகிகள்;
சமுதாய மன்றத்தில்
நீதிகேட்டு
காற் சிலம்புகளை
எறிகின்றோம்...
மாணிக்கப் பரல்கள்
கிடைக்குமென் பதற்காக...
ஆனால்—
சரளைக் கற்களே
சிதறிச் சிரிக்கின்றன...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர் கால
கணவன்மார்களை
மனத்திருத்தி—
அவர்கட்காய்
வாழ்ந்து...

மாதவியை அவன்
அடைந்தாலும்—
காற்சிலம்பை அடகிற்காய்
கழற்றிக் கொடுக்கின்றோம்—
வறுமைப் புரட்சியை
வெல்வதற்காக...?

## கண்ணீர் மலர்கள்

இறைவனின்
சந்நிதியில்
காகிதப் பூக்கள்
அலங்கரிப்பதால்
நாம்
கண்ணீர்ப் பூக்களாய்
மண்ணில்
கருகுகின்றோம்.

## காணிக்கை

வசந்த காலத்துப்
பூஜையில்
கண்ணனின் தரிசனத்திற்காக
சீதன மலர்களை
சுமந்து கொண்டு
செல்லாததால்
நாமோ—
பாலைவனப் பூக்களானோம்?



2891

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகலிகைகள்

கல்யாண நகரத்தில்
கண்ணகியைத் தேடினால் —
பாலைவனக் காட்டில்
வறுமை ஆடை
நெய்து —
கொடுமையால் அதை
அணிந்த
அகலிகைகளே
தென்படுகின்றார்கள்.

— — —

பெற்றவர்களை
நெய்யாக்கி
சீதனப் பெருநெருப்பில்
தீக்குளித்து—
இராமர்களின்
வரவிற்காய்
காத்திருக்கிறோம்...
தவம் கலைந்த
தபசிகளே
ஏராளம்! ஏராளம்!!

— — —

மழையில்
நனைகின்ற மயிலுக்கு
போர்வை வழங்க
வள்ளல்கள்
இன்றில்லாததால்
நிர்வாண உடலுடன்
எங்கள்
வறுமை நீரோட்டம்
தொடர்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தப்புரராணிகள்

இந்த
கோகுலத்துப் பறவைகளை
தேடி
ஆயர்குலத்துக் கண்ணன்கள்
வராததால்—
சீதனப் புருவைத்
தேடி—
வாழ்வுப் பாலைவனத்தில்
பணச் சுல்தான்களின்
அந்தப்புரத்தில்
சேவுகம் செய்கின்ருேம்.

## காத்திருக்கைகள்

ஏழ்மை நெருப்பில்
தீக்குளித்து
காத்திருக்கிருர்கள்
சீதேவிகள் —
இன்றய இராமர்களோ
சீதனத் தாடகையை
எதிர்நோக்கி
சென்றுவிட்டனர்.

## முல்லைக் கொடிகள்

இன்று
தேர்கொடுக்க
பாரிகள் —
இல்லாததால்
முல்லைக் கொடிகள்
நிலத்தில்—
படர்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வறுமை

இன்றைய
கண்ணன்கள்
பணக் கௌரவர்களின்
பணயக் கைதிகளானதால் —
வறுமைத் துச்சாதனன்களால்
மீண்டும் — மீண்டும்
நாம் —
துகிலுரியப் படுகின்றோம்

## வெண்துகில் பூக்கள்

துன்பமுட்களை
சூடிக் கொண்ட
சோக நாயகிகள்!
பாலைவனக் காட்டில்
பூத்த —
வெண்துகில் பூக்கள்
உணர்ச்சிப் பொந்தில்
வாழ்கின்ற —
நிலக்கிளிகள்!
தொடுவானமான
அவர்கள் ஒரு
எரி நட்சத்திரங்கள்
சோகத் தீக்குளிப்பில்
எரிகின்ற
மெழுகுவர்த்திகள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்னிகள்

பணமலைகளில்
மோதுண்டு
சீதனக்காட்டில்
எறியப்பட்ட
கன்னிவிமானங்கள்
நாங்கள்...
சமதர்மபடைகளின்
தேடலில்—
நாம்அகப்படாததால்
எங்களின்
வனவாசம் நீள்கிறது...
கனிகொடுக்கும்
மந்திரக்கணையாளி
நம்மிடம் இருந்தும்
மறுதளிக்கும்—
துஷ்யந்தன்களின்
மறதியில்—
நாம்—
கண்ணீர்சமுத்திரத்தில்
சுயநலமீன்களுக்கு
இரையாகிப் போனோம்...
என்றோ ஒருநாள்...
எம்மீட்பர்களின்
கருணை அரண்மனை
தனது
வாசல் கதவைத்
திறக்கும்... அப்போ—
எம்மை—
துஷ்யந்தர்களால்
அடையாளம்காண
முடியாது—
ஏனெனில்—
முதுமை நம்மை
அலங்கரித்திருக்கும்...

KOHA JPL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலவு

திரைப்படத்தில்
இரட்டைவேடக்காட்சி
போல் — நீ
நீல ஆடையில்
அழகு காட்டுகிறாய்.
சிலசமயம்—
வெள்ளை உடுத்தி
விதவையாய்
எம்மைவெதும்ப
வைக்கின்றாய்...
இதுஏன்?
பாரினில் பாவையர்
நிலை
விளக்கத்தானோ?

## தமயந்திகள்

பத்திரமாய்
பவித்திரமாய் இருந்தும்
சீதனக்கானகத்தில்
கைவிடப்பட்ட
தமயந்திகளே நாங்கள்!

## தரிசனம்

சீதைகளைத்தேடி
சமுதாயமன்றத்திற்கு
போனால்—
சீதனப் பாண்டவர்களால்
கைவிடப்பட்ட
பாஞ்சாலிகளின்
தரிசனமே கிடைக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

# இதுதானோ?

பூவில்
தேனாய்இனிப்பது
பூவையர்பாரில்
சிந்தும்—
கண்ணீர் தானோ?
பாரினில்—
கானலாய் எரிவது
கன்னியர்விடும்
எரிமூச்சுதானோ?

அழகை ரசிக்க
பயணம் செய்யும்
ரசிகனே—
எம்நாட்டு
கிராமத்து
ஏழைக்கன்னி மலராக்களின்
அழகை
தரிசிக்க வாரார்தது
ஏன்?

குடிசையில்
பருவமொட்டடவிழ்ந்து
நிற்கும் நாங்கள்
பாடுவது
பட்டினி ராகங்கள்!
அவையோ
பணமாளிகையின்
மயக்கு கவிகளில்
அபசுரமாகின்றனவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெறுமை

வாழ்க்கை முற்றத்தில்
வறுமைக்கோலங்கள்
போடுகின்றனம்
கைகள்
பிள்ளையார்பிடிக்க
சர்ணம்தேடி
வீடுவீடாக
அலைகின்றன...
பணக்குமரிகளோ
பவுடரினால்
கோலம்போட்டு
சலோலைட் பிள்ளையார்
வைக்கின்றார்கள்.

## வஸந்தம்

நமது —
கண்முன்காணும்
சோலையில் —
பூத்துக்குலுங்கும்
மணமலர்களை
வஸந்தக்காற்று
தாலாட்டுகிறது.
எங்கள் —
பருவப்பூக்கள்
பூத்தும் —
வஸந்தம் வீசவுமில்லை
கல்யாணசுகந்தங்கள்
ஏனோ —
மணக்கவுமில்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ

குளிர் நிலவென்று
அதிகாரமே
நீ
வரும்போது
கூடவே எனக்கு
குளிர்சுரமும்
வருகின்றதுவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர கீதங்கள்



## சிந்தனை

வறுமைஏர்கள்
உழுவதால்தான்
எங்கள்
சிந்தனைப் பயிர்கள்
எதிர்கால அறுவடைக்காய்
காத்துநிற்கின்றன.

## வறுமை மலர்கள்

வறுமை மலர்களை
சுமந்துவரும்
வாழ்க்கை நதியே
பணச்சமுத்திரத்தின்
சட்டமறுதலிப்புக்களால்
உன்—
திசைகள் திரும்பியதோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மயக்கம்

எங்களுக்கு
மாளிகை மயக்கங்கள் —
சிறிதுமில்லை —
பசிமயக்கம்தான்
அதிகம் —

JPL KOHA

## கர்த்தரே...

வறுமைக்கடலில்
இருந்து
மீட்கவந்த
மீட்பரே
எமையேன்
மீண்டும்
பட்டினிப் பாலைவனத்தில்
போட்டீர்.

## ஆணவம்

ஆணவம் பற்றி
பேசிய
அந்தக்கனவான்
தனது
ஸ்கூட்டரின் பெடலை
உதைத்தபோது
ஆணவம் தெரிந்தது.

## படைப்பு

பிரமனின்
படைப்பில்ஓசை —
பிணமாளிகையில்
புரண்டது.
ஓசை —
வறுமைச்சகதியில்
புதைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுளம்பு

அடிக்கடி
நமதுடம்பை
பரீட்சிக்கும்
டாக்டர்.

## உழைப்பு

வறுமை நதியின்
ஈரலிப்பில்—
வியர்வைச் செடியில்
வாழ்வுப்பூக்கள்
மலரும்—
அங்கே
உழைப்பு உரமாகும்.

## வறுமை

மண்ணளந்த
துன்பேந்திரன்
எல்லாவற்றையும்
தனதாக்கி—
என் தலையிலும்
கால்வைத்துவிட்டான்

## தியாகம்

இன்பத்தினை
இனிதாக
அள்ளியே—
அளித்திடும்நாம்—
விலைமாதர்களல்ல...
தியாகிகள்
நமது
பசியைத்தீர்ப்பதற்குப்
பிறர்பசியை
தீர்க்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீதனக் கலங்கள்

எங்கள்
இதயவிண்வெளியில்
சீதனக்கலங்கள்
சீராக இல்லாத தால்
ஆம்ஸ்ரோங்கள்
கால்வைக்கவில்லை ...

KOHA
JPL

## ஏழைப்பட்சிகள்

நர்ங்கள்
கோகுலத்துப்பறவைகள்
தான் —
எம்மைகொஞ்ச
கோகுலத்துக்கண்ணன்கள்
தயாராய்இல்லை
ஏனெனில்
நாங்கள்
ஏழைப்பட்சிகள்!

## நியதி

வானத்தோட்டத்தில்
மலர்ந்திருக்கும்
அக்கினிமலர்களை
பறிப்பதற்கு—
காலைவரை
கதிரவன் காத்திருக்க
வேண்டுமா?

## விலைமாது

புகுந்தவீடு
ஒன்றில் ஒளி
விளக்காகவேண்டியவள்
இன்று —
சீதனம்வேண்டி
தெருவிளக்கானுள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாசம்

இதயக்காணிக்கையாக
இந்தக்கல்லறைக்கு
சாத்திவிட்ட
மலர்களை மறந்து
உறவின் பின்னே
சென்றுவிட்டது
இதயம்.

நாளைய மரணத்தை
நினைக்காத மலர்கள்
இன்றைய ஜனனத்தை
நினைத்து பூத்துச்
சிரிக்கின்றன...

எங்கள்
நிர்வாண வயிறுகள்
நிரப்பப்படும்வரை
உங்கள்
கோரிக்கைகள்
பயனற்றுப்போகும்.

## கனவுகள்

முற்றத்தில்
பூத்த
மல்லிகைமலர்களை
பனித்துளிகள்
குளிப்பாட்டும்போது—
எங்களை—
கண்ணீர்மழைகள்
குளிப்பாட்டுகின்றன...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் பயணம் தொடரும்

பாலைவனவெளியில்
வாழ்வுப்புஸ்பங்களில்
தேனை —
அள்ளிப்பருகுவதற்காக
சூரண்டல்சூறுவளியை
எதிர்த்து —
குடும்பச்சுமைதாங்கும்
ஒட்டகமாய்
எங்கள் பயணம் தொடரும்

வாழ்வுக்குழந்தையை
அள்ளிஅன்புடன்
அணைப்பதற்காக —
வறுமைத்துப்பாக்கி
வேட்டுக்களை —
தாங்கிக்கொண்டு
எங்கள் —
பயணம்தொடரும்!

வாழ்வெனும்
வேள்வித்தீக்கு
விறகுதேடி —
உழைப்புக்காடு
நோக்கி —
நம்பிக்கைகோடரியுடன்
எங்கள்
பயணம்தொடரும்!

இரத்தஅருவி
சிந்திடினும்
கொடுமைமுட்களை

முறித்து —
விடுதலைரோஜா
எனும்
இரத்தபுஷ்பங்களை
பறிப்பதற்காய்
எங்கள் —
பயணம்தொடரும்!



யாழ் மாநகர சபை
யாழ்ப்பாணம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுமைகள்

யேசுநாதர்தான்
சிலுவைசுமந்தார்
என்பதல்ல...
நாங்களும்தான்
ஏழைத்தங்கைகளை
கரைசேர்க்க —
பாலைவனத்தில்பொதி
சுமக்கின்றோம்.

## எதிர்பார்ப்போமாக

புனிதகங்கையில்குளிக்கலாம்
என்றுநம்பியே
இன்று
கானல்நீரில்குளிக்கின்றோம்
பால்நிலவில்
படுத்துறங்கலாம்என்று
நம்பியே
பாலைவனத்தில்துயில்கின்றோம்
மலர்மேட்டில்நடக்கலாம்
என்றுநம்பியே —
கொடியநிலத்தில்
நடக்கின்றோம்
இனிதாகவாழலாம்
என்றுநம்பியே
துன்பச்சுமைகளை இனிச்
சுமக்கின்றோம்...
கண்ணில்நீர்
ஆனந்தகங்கைஎன
ஓடுமென
நம்பியேஇசை
இரத்தக்கண்ணீர்வடிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லவிடியலுக்காக
வேண்டியேஇசை
துயில்கொள்கின்றோம்
எமக்கு
புதுஉலகம்பிறக்கும்
எனநம்பியே
இன்று—
சுமைதாங்கியாகஇருக்கின்றோம்
நாளை—
உறவுகள்கைகொடுக்கும்
எனநம்பியே
இன்று
சொந்தம்கொண்டாடுகின்றோம்
நாளைநட்சத்திரம்
பூக்கும்என
நம்பியே
வானத்தில்எம்
நம்பிக்கைநட்சத்திரங்களைப்
பதித்துவைத்திருக்கிறோம்.

## எட்டாக்கனிகள்

பாலைவனத்தில்
பசித்திருக்கும் எங்களுக்கு —
ருசிமிக்கபேரீச்சம்
பழமரங்கள்
காய்த்துநின்றும் —
எட்டிப்பறிக்க
கைகளைநீட்டினால்
எட்டிஎட்டிப்
போகிறதே...
ஏழையானதால்
அதுஎட்டாக்கனியோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் கதி

கல்யாணச்சந்தையில்
விலைபோகமாட்டாத
சரக்குகள் நாங்கள்,
எங்களில்
நிரம்பஉண்டு
கேள்விதான்
பூஜ்ஜியம்...

X

எங்களை
வாங்கயாரும்
வராததால்
நாம்
கல்யாணச்சந்தையில்
இருந்து
மீளவேண்டியதுதான்

X

இருந்தாலும்
ஒருநம்பிக்கை...
விலைபோகாவிட்டாலும்
பூமித்தாயும்
கைவிடமாட்டாள்என்று.

X

காலக்கரையில்
வயதுச்செலவில்
எமக்குவருமானம்
இன்மையால்...
நடைப்பிணமாய்
வாழ்கின்றோம்ஏதோ
ஒன்றிற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓட்டைகள்

வானப்பெண்ணே!
நீயும்—
என்னைப்போல
ஏழைதான்—
உனது ஆடையில்
எத்தனை
நட்சத்திரக்கந்தல்கள்!

## கண் திறக்காத கடவுள்

இன்னும்
நம்மிடையே
நக்கீரப்பரம்பரை
இருப்பதால்—
கண்களை
இறைவன் திறக்கவில்லையோ


## எங்கும் நிறைந்தது

இறைவனின் தரிசனம்
என்ற
வணக்கப்படத்தின்
இலவ சக்காட்சிக்கு
ஏழையர் நாம்
போகலாம் என்றால்
பணமன்னர்களே
முன்வரிசையில் நிற்கிறார்கள்!
சாமியின் ஊர்வலத்தில்
பல்லக்கின் தூண்களுக்கு
தோள்கொடுக்கலாம்
என்றால்—
அங்கும் பணத்தோள்களே
சுமக்கின்றன...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவகை விளக்கம்



## சாதி

உயர்குடி விஞ்ஞானிகள்
எங்கள் —
கண்ணீர் சமுத்திரத்தில்
நடாத்தும்
நியூட்ரோன் அணுகுண்டு
பரிசோதனை.

## ஆட்சியாளர்

மானிடர்
தலைஎழுத்தையே
மாற்றியமைக்கும்
பிரமாக்கள்!
தலைவிதி
என்பதையே
மாற்றியமைக்கும்
அஞ்ஞானிகள்!!

சிரித்திரன் மார்கழி 1980



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெறுமை

வல்லரசுக்குருக்களின்
அணுகுண்டு அர்ச்சனை யால்
சமாதானத் தெய்வம்
சாம்பலாகின்றது.
யுத்தக்குழந்தை
பிறப்பில் —
மனிதமந்தைகளின்
மயானக்காடே
எஞ்சும் —
சமாதானப்புறுக்கள்
பறந்துவிடும்.

## பெருமிதம்

நாட்டின்தலைவர்
அமரும்
சிம்மாசனம் நினைத்தது
நான்என்றும்
பெருமைக்குரியவன்...
ஆமாம் —
ஆட்சிமாறினாலும்
நான் —
மாறுவதில்லை.

## வெங்காயம்:

ஏதோவொன்றிற்காய்
அவளின்
ஆடைகளைக்களைந்து
பார்த்தும் —
அதுகிடைக்கவில்லை...
கண்ணீர்தான்
எரிச்சலாய்வந்தது.



KOHA JPL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதல்

இதயங்களின்
இளமைராகங்கள்,
கனவுத்தொழிற்சாலையில்
வஸந்தருதுக்களின்
உற்பத்தி.

## ஏழைகள்

இறைவனின்
காலடியில்
இடரப்பட்டு
பள்ளத்தில்வீழ்ந்த
இரத்தபுஷ்பங்கள்

## பெண்

அர்ச்சனை மலர்களாய்
மலர்ந்து
காத்திருக்கிறோம்
அர்ச்சகரைத்தான்
காணோம்.

## பட்டி மன்றம்

நவயுகத்து
கண்டுபிடிப்புகளை
ஆராயத்தெரியாத
பண்டிதவிஞ்ஞானிகள்
கண்ணகிமாதவியினது
கற்பை—இன்றும்
சபைநடுவே
பிரேதப்பரிசோதனை
நடத்துமிடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
TCL

## பெண்மை

இன்பஸ்வரங்களை
இனிதாக—
மீட்டித்தருகின்ற
காதல் வீணைகள்;
கல்யாணசுகந்தங்களை
கனிவாக—
அள்ளித் தெளிக்கின்ற
பன்னீர்மலர்கள்

## அந்தரங்கம்

நாம்
சமுதாயமேடையில்
ஆடவென்று பாதம்
தூக்கிஞல்—
கொடும்முட்கள்
குத்துகின்றன
இதஞல்
எம்ஆட்டம்
மனஅரங்கத்திலேயே
ஆடி—
முடிக்கப்படுகிறது.

## சுதந்திரம்

எங்கள்
வீட்டுக்குலமகள்
வந்தவேளை
சரியில்லாததாலோ—
விளக்குகள்
எரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கை

மனிதத்தலைகளை
காலக்கரங்கள்
நகர்த்தும் —
ஒரு
சதுரங்கப்பலகை

## விலைவாசி

உலகக்கரங்களுக்குள்
அகப்படாத
ஒரு
தெருவானம்!

## அமுலாக்கம்

விழிமடலில்
கனிவுமொழியில்
அன்புத்திட்டம்
தீட்டி
இதயமெனும்
சட்டசபையில்
காதல்சட்டம்
அமுலாகின்றது.

## கண்ணீர்

இதயச்சிறையின்
துன்பக்கைதிகளின்
விடுதலைக்கீதம்!
கோஷங்கள்இல்லாத
மௌனப்போராட்டத்தில்
வெளிப்பாடுகள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் வாதிகள்

மக்களை
மோதவிட்டு
வேடிக்கைபார்க்கும்
பார்வையாளன்

## மனிதன்

சண்டித்தனச்சுறுக்களும்
ஆக்கிரமிப்புத்திமிங்கிலமும்
நிறைந்த
உலகசமுத்திரத்தில்
முத்தெடுக்க
முனைகின்றவன்.

## மகாத்மாக்கள்

கோட்சேக்கள்
இன்னும்
உயிரோடிருப்பதால்
மகாத்மாக்கள்
உருவாகவில்லை.

## உண்மைகள்

இடி
இடிக்கிறது
மின்னல்
தெறிக்கிறது
முகில்கள்
கோலமிழந்தது
மழையைத்தான்
காணவில்லை...



பூர் வீதி
யாழ். மாநகர சபை
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீதனம்

ஏழைப்பெண்களுக்கு
நேராக—
குறிவைத்துள்ள
துப்பாக்கிரவைகள்

சிரித்திரன்

இதயம்
ஒருசமுத்திரம்
என்பதினாலோ
கண்ணீர்
உப்புக்கரிக்கின்றது.

கனவுதேவதையே
என்னை
நீ காணவரும்போது
சுகம்தரும்—
மணமலர்களை
கொண்டுவராமல்
கண்ணீர்மலர்களை
சுமந்துவருகின்றாயே...
என்—
கல்லறைக்கு
சூட்டிமகிழவோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவுப்பூக்களை
சுமந்து
வருகின்ற
வறுமைநதியே
நீ—
பாலைவனத்தில்மட்டுமே
பாய்வதால்
சகாராவைத்தாண்டாத
எமக்கு—
பசுமையைத்தர
முடியவில்லை.

## துரதிஷ்டம்

தொட்டால்
மலருமாம்
நானும்தான்
தொடுகின்றேன்
ஒன்றும்
மலரக்காணோமே...?

## நான்

மனவெளி
மனிதனின்—
தன்மானச்சின்னம்

## தாய்

தறுதலைப் பிள்ளைக்காய்
அடிவாங்கும்
அடிவாங்கும்
மிருதங்கம்.



KOHA JPL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனனம்

கொடுமைமுட்களின்
பாதுகாப்பில்
எனது
கவிதைப்பூக்கள்
துன்பப்பிரசவத்தில்
ஜனனமாகும் —

## சக்தி

இன்று —
எலிகளின்
போராட்டத்தில்
பூனைகள்
திண்டாடுகின்றன.

## கோயில்

இளநெஞ்சங்களின்
அந்தப்புரம்!
வாழ்க்கைக் கூட்டுத்தாபனத்தின்
நேர்முகப்பரீட்சை
அலுவலகம்!

சிரித்திரன்

## சட்டங்கள்

வாழ்வின்
மறுதலிப்புக்காய்
அரச ஏகலைவர்களால்
பிரசவிக்கப்பட்ட
சிசுக்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகரீகம்

வான்கோழிப்
பரபரப்பு...
ஏழையை ஏய்க்கும்
விதைவிந்து...
பணத்துரையைத் தழுவும்
விபச்சாரி.

2891
KOHA JPL
205TC.C

## ஞானி

ஆரவாரப்பட்சிகளும்
ஆசைப்பருந்துகளும்
அகன்று
மௌனப்புறுக்கள்
யோகக்கூடு!

பொது சன நூலகம்
2891
ஸ்ரீ வீதி கிளை நூலகம்
யாழ். மாநகர சபை
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● நன்றிக்குரியவர்கள்;

☐ கவின் அச்சக ஊழியர்கள் ☐ ஓவியர் 'ரமணி'

☐ 'சிரித்திரன்' குடும்பத்தினர்

☐ நண்பர்கள்—

'அகளங்கன்', சுதாராஜ், கணபதி கணேசன்

☐ மற்றும் பெயர் குறிப்பிடுவதை விரும்பாதசிலர்.

KOHA JPL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

யாழ் மாநகர சபை
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2891
894.811

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



— இவன் — முல்லை அமுதன்

— இந்த எரிசரக் கவிதைகள், கருக்கொண்ட எரிமலை, இதயத்தோன்.

— ஆழ்ந்த சமூக உணர்வும், மனிதாபிமானமும் இவன் கவிதைகள் அடிநாதம்.

— புதிய் கோணம், புதிய சிந்தனை இளைய தலைமுறையின் எழுச்சிஎண்ணங்கள் இவன் கவிதைகளில் ஜீவத்துடிப்புடன் ஒளிர்கின்றன.

— விமர்சனங்களை எதிர்நோக்கும் இதயமுள்ள படைப்பாளி.

— கவிதை மட்டுமல்லாது இலக்கியத்தின் பல்வேறு கோணங்களிலும் இவன் பார்வை பரந்துவருகிறது..

— இவனின் எதிர்காலப் படைப்புக்களின் 'அணு'க் கோலங்களை, நித்ய கல்யாணி நிர்மலமாகவே காட்டுகிறது.

— இவன் கவிதைகள் வைரம் மிக்கவை வைரமாய் ஒளிர்பவை.

வர்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org